**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**அ.வ.எண்.151/2025**

**(CNR No.TNDGO8000205–2025)**

செந்தில்குமரேசன் ....வாதி

**/எதிர்/**

குணசேகரன் ....பிரதிவாதி

இந்த வழக்கானது கடந்த 03.12.2025–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக கடந்த 25.06.2026–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.த.யுவராஜா,** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜராகவில்லை என்பதால், தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு, ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

மேலே கண்டபடி கூடுதலாகும் தொகை ரூ.79,450/–ம் அசல் தொகை ரூ.70,000/–க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை 2% பின்வட்டியும், இவ்வழக்கின் செலவு தொகையையும் சேர்த்து வாதிக்கு பிரதிவாதி செலுத்தி வேண்டும் என்று வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.06.30 17:18:06 +0530

**<u>2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :</u>**

2.1. வாதியிடமிருந்து பிரதிவாதி அவருடைய அவசர நிமித்தம் குடும்ப செலவுகளுக்காகவும், சில்லரை கடன்களுக்காகவும் கடனாக ரொக்கம் ரூ.70,000/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும) பெற்றுக் கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1-00 வீதம் வட்டி கூட்டி கூடிய வட்டியையும் அசலையும் சேர்த்து வாதி வேண்டும் போது அல்லது வாதியின் உத்தரவு பெற்றவரிடமாவது ரொக்கம் செலுத்தி வைப்பதாக கண்ட கடந்த 10.10.2024-ம் தேதி வாதியின் பெயருக்கு வாதியின் வீட்டில் வைத்து தாவா பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், தாவா பிராமிசரி நோட்டின் அசலுக்கோ, வட்டிக்கோ யாதொரு தொகையும் பிரதிவாதியால் வாதி வசம் செலுத்தி வைக்கப்படவில்லை என்றும், மேற்படி தாவா பிராமிசரி நோட்டிற்குண்டான தொகை வகையறாவை செலுத்தி வைக்கும்படி வாதி பிரதிவாதியை பலமுறை நேரிலும், ஆட்கள் மூலமும் துயர்ந்து கேட்டதில் பிரதிவாதியும் செலுத்துவதாகவே சொல்லி செலுத்தாமல் வீண்காலம் கடத்தி வந்த தற்சமயம் வாதியிடன் பெற்றிருந்த தாவா பிராமிசரி நோட்டு கடனை மோசம் செய்யும் நோக்கத்துடன் பிரதிவாதி வெளியூர் சென்று விடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார் என்றும், பிரதிவாதியிடமிருந்து தாவா பிராம்சரி நோட்டு தொகை வகையறாவை வசூலிக்க வேண்டும் என்றும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டும், உரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும், பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தினால் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு, ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டுள்ளார்.



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.06.30 17:18:27 +0530

**4. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்,**

வாதிக்கு தாவா தொகையான ரூ.79,450/–ம் பிராமிசரி நோட்டின் அசல் தொகை ரூ.70,000/–க்கு பிராது தேதி முதல் மாதம் 1–க்கு ரூ.100/–க்கு ரூ.1.00 வீதம் பின் வட்டியுடன் பிரதிவாதி செலுத்தி வைக்கும் படி உத்தரவிடக் கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? இல்லையா? என்பதே ஆகும்.

**5. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் :**

இவ்வழக்கில், வாதி செந்தில் குமரேசன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது. வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக நடராஜன் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் வாதி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6. வாதி தரப்பு வாதுரை :**

வாதி தரப்பில், வாதியிடமிருந்து பிரதிவாதி அவருடைய அவசர நிமித்தம் குடும்ப செலவுகளுக்காகவும், சில்லரை கடன்களுக்காகவும் கடனாக ரொக்கம் ரூ.70,000/– (ரூபாய் எழுபதாயிரம் மட்டும) பெற்றுக்கொண்டு கடந்த 10.10.2024–ம் தேதி வாதியின் பெயருக்கு பிராம்சரி நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேற்படி தொகையை செலுத்தி வைக்க கோரி வாதி பிரதிவாதியை பலமுறை கேட்டும் மேற்படி தொகையை செலுத்த பிரதிவாதி முன்வரவில்லை என்றும் வாதிடப்பட்டது.

**7. தீர்வு:**

7.1. வாதிக்கு தாவா தொகையான ரூ.79,450/–ம் கடனுறுதிச்சீட்டு அசல் தொகை ரூ.70,000/–க்கு பிராது தேதி முதல் 12% வீதம் வட்டியுடன் பிரதிவாதி



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.06.30 17:18:46 +0530

செலுத்தி வைக்கும்படி உத்தரவிட வேண்டும் என்று வாதியால் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வாதி தரப்பு சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 பிராதை தழுவி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தை உறுதிப்படுத்த வாதி தரப்பில் வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடந்த 10.10.2024–ஆம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டு வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

7.2. வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக நடராஜன் என்பவர் வா.சா.2–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2 தனது சாட்சியத்தில், "**பிரதிவாதி குணசேகரன் என்பவர் வாதியிடம் 10.10.2024–ம் வருடம் ரூ.70,000/– கடன் பெற்றுக்கொண்டு ஷ தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு வட்டி ரூ.1–00 வீதம் சேர்ந்து செலுத்தி வைப்பதாக ஒப்புக்கொண்டு தாவா பிராம்சரி நோட்டினை வாதியின் வீட்டில் வைத்து பிரதிவாதி கையெழுத்து செய்து கொடுத்தார். தாவா பிராம்சரி நோட்டினை நான்தான் எழுதினேன். அதில் எழுதியதும், சாட்சியமாக கையெழுத்து செய்திருக்கிறேன். தாவா பிராம்சரி நோட்டு வாதியின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது.**" என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் வாதியிடம், பிரதிவாதி கடந்த 10.10.2024–ம் ஆம் தேதியன்று கடனாக ரூ.70,000/– ரொக்கம் பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் 1–க்கு ரூ.100/–க்கு வட்டி ரூ.1.00 வீதம் சேர்த்து வட்டியும் முதலும் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு தாவா பிராமிசரி நோட்டை எழுதி கையொப்பமிட்டு வாதியிடம் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

7.3. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 மூலமும் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோரின் சாட்சியத்தின் மூலமும் வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. வாதியின் வழக்கை மறுத்துரைக்க பிரதிவாதி ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்யவோ, வாதியின் வழக்கை மறுத்து சாட்சிய, சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தவோ இல்லை மாறாக தோன்றாத்



APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.06.30 17:19:03 +0530

தரப்பினர்களாக கருதப்பட்டு ஒருதலைபட்சப்படுத்தப்பட்டுள்ளார்கள். இந்நிலையில், வாதி தனது தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 மூலம் வாதியின் வழக்கை நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, தாவா தொகை ரூ.79,450/–ம், அசல் தொகை ரூ.70,000/–க்கு பின்வட்டி மற்றும் தாவா செலவு தொகையை வாதிக்கு, பிரதிவாதி செலுத்திவைக்க கடமைப்பட்டுள்ளார் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8.** இறுதியாக, வாதிக்கு, பிரதிவாதி தாவா தொகை ரூ.79,450/–, அசல் தொகை ரூ.70,000/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6% பின்வட்டியுடன் தாவா செலவு தொகையையும் சேர்த்து செலுத்தி வைக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஜூன் மாதம் 30 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.06.30 17:19:34 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள் :–</u>**

வா.சா.1 – செந்தில்குமரேசன்

வா.சா.2 – நடராஜன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| வ.எண். | தேதி | விபரம் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.10.2024 | வாதி வீட்டில் வைத்து பிரதிவாதி எழுதிக்கொடுத்த தாவா பிராமிசரி நோட்டு | அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சியம் : இல்லை.**

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை.**

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.06.30 17:19:47 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**பழனி.**